# முக்கியம்
# EASYPAY வைப்புக்கள்

இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டுதலுக்கு அமைய, வேண்டுமென்றே சேதப்படுத்தப்பட்ட, மாற்றம் செய்யப்பட்ட அல்லது உருக்குலைக்கப்பட்ட நாணயத் தாள்களை **2018 ஏப்பிரல் 1ஆம் திகதியிலிருந்து ஏற்றுக்கொள்ளக் கூடாதென** சகல வங்கிகளும் அறிவுறுத்தப்பட்டுள்ளன. 2018 ஏப்பிரல் 1ஆம் திகதிக்குப் பின் இலங்கை மத்திய வங்கி பொதுமக்கள் சார்பில் அத்தகைய நாணயத் தாள்களை மாற்றிக்கொடுக்கும்.

இந்த அறிவுறுத்தலை அனுசரிக்கும் முகமாக, **2018 மே 1ஆம் திகதிக்குப் பின் வைப்புச் செய்யப்படும் அத்தகைய நாணயத் தாள்களின் பெறுமதி** மொத்த வைப்புப் பெறுமதியிலிருந்து **கழிக்கப்படும்.** அத்தகைய நாணயத் தாள்கள், அவை **வைப்புச் செய்யப்பட்ட கிளையில் வைத்திருக்கப்படும்.**

கிளை அல்லாத வைப்பு இயந்திரமொன்றில் வைப்புச் செய்யப்படும் ஏதேனும் கொடுப்பனவுகளைப் பொறுத்த வரையில், நாணயத் தாள்களை எமது யூனியன் பிளேஸ் கிளையில் சேகரிக்கலாம்.

*** HSBC கிறெடிட் கார்ட் வைத்திருப்பவர்கள் ஏதேனும் கட்டணங்கள் அறவீடுகள் தொடர்பில் வங்கியின் தற்போதய விதிப்பனவுகள் பட்டியலினால் பிணிக்கப்படுவர். இதன் காரணமாக ஏற்படக்கூடிய ஏதேனும் இழப்பு சேதத்திற்கு வங்கி பொறுப்பாளியாகாது.**

**இலங்கை மத்திய வங்கியிடமிருந்து பொதுமக்களுக்கான அறிவித்தல் !**



2018 மாச்சு 31 தொடக்கம் மறு அறிவித்தல் வரை, வேண்டுமென்று உருச்சிதைக்கப்பட்ட நாணயத் தாள்களை தூய நாணயத் தாள்களாக இலங்கை மத்திய வங்கியின் தலைமை அலுவலகத்தில் நேரடியாக அல்லது பிரதேச அலுவலகமொன்றினூடாக அல்லது பதிவுத் தபால் மூலமாக தலைமை அலுவலகத்திற்கு அனுப்புவதன் மூலம் மாற்றிக் கொள்ளமுடியும்.

இச்சேவை பெற்றுக்கொள்வது தொடர்பான படிவத்தினை இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்திலிருந்து (www.cbsl.gov.lk) அல்லது பிரதேச அலுவலகத்தில் அல்லது உரிமம் பெற்ற வர்த்தக வங்கியின் ஏதேனும் கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.



எனினும், தவறுதலாக சிறிய புள்ளியொன்றின் அல்லது கோடொன்றின் வடிவில் அடையாளமிடப்பட்டுள்ள நாணயத் தாள்கள் வேண்டுமென்று உருச்சிதைக்கப்பட்ட நாணயத் தாள்களாக கருத்திற்கொள்ளப்படமாட்டாது என்பதுடன் அத்தகைய நாணயத் தாள்களை கொடுக்கல்வாங்கல்களுக்காக தொடர்ந்தும் பயன்படுத்த முடியும்.

**உருச்சிதைக்கப்படாத தூய நாணயத் தாள்களைப் பயன்படுத்துவோம்!**

**தேசிய செல்வத்தினைக் காப்போம்!**

நாணயத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி, 30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01
தொ.பே :+94 112477253 | தொ.நகல்:+94 112477726 | மின்னஞ்சல்: currency@cbsl.lk
ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA